முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.04.2023**, வியாழக்கிழமை

1. வானவர்கள் மெச்ச கலியினில்
   வழிகாட்டும் ஞான வள்ளலே
   தானதரும நெறிமுறைகளே
   தயவை மக்களிடை விதைக்குமென
2. விதைக்குமென அருளும் ஞானியே
   வேலவனார் சொரூபனே உமைபோற்றி
   பூதலத்தில் அனுகூல ஆசிதனை
   புகலுவேன் சுபகிருது சேல்திங்கள்
3. திங்களிலே முவேழீர்திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் **23**ம் நாள் **06.04.2023**, வியாழக்கிழமை)
   தேசிகனுக்கு மதுரகவி ஆழ்வாரும்
   ஓங்காரன் படைகள் அமைய வளர
   ஓங்கார உலகமாகிட உரைப்பேன்
4. உரைக்கவே ஓங்கார நாதமாக
   உயர்ஞானி அரங்கன் தரும்
   மறைபோற்றும் மகாமந்திர தீட்சையே
   மகத்துவம் தரும் ஞானமாகும்
5. ஆகவே உலக மக்களும்
   அணுகி தீட்சையாக ஏற்று
   வகைபட அனுதினம் செபதபம்
   வேலவன் வழிபாடாக பூசையாக
6. ஆகவே முக்காலமும் செய்து
   ஆணவம் அகங்காரம் அழியவே
   மகான்களின் திருவடிகளை பற்றி
   மாதரும சேவைக்குள் வந்து

7. வந்துமே மற்றவர் பிரச்சனைகளை
வாட்டும் பசிபிணி அல்லலை
எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி
இவ்வுலகில் போக்கும் வல்லமை தாஎன
8. வல்லமைதா என வேண்டி
வள்ளலின் வழி வருகின்ற
நல்லதொரு மக்கள் கூட்டமே
ஞானவான் படைகளாக மாறி
9. மாறியே அவர்கள் சிந்தைவழி
மகான்கள் கூட்டம் இறங்கி
அறுபத்து மூவராய் ஆழ்வார்களாய்
அதிசயமிக்க ஞானிகள் படைகள்ஆக
10. ஆகவே வரங்கள் அருளி
அரங்கன் ஆசிபெற்ற நல்
செகமக்கள் சீடர்கள் வழி
செப்பிட வெளிப்பட்டு அற்புதம்
11. அற்புதம் பேருலகில் படைப்பர்
அரங்கன் வேண்ட வேலவனும்
ஏற்பு கொண்டு இறங்கி காப்பு
யாவர்க்கும் தந்து உலகமாற்றம் நிகழும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–